Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 480/2024

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 18-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | பாலு | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | ஜானகிராமன் | சமயம் | - | |
| கிராமம் | - | கருவேப்பிலைபாளையம் | வயது | - | 37 |

18.07.2025

3 வது எதிரி ஆஜர். 1, 2, 4 முதல் 6 எதிரிகள் ஆஜரில்லை. 1, 2, 4 முதல் 6 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது கருவேப்பிலைபாளையத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். 2016 ம் வருடம சாயந்தரம் 07.30 மணியளவில் சத்தம் கேட்டது. தகவல் தெரிந்து ஓடிப்பார்த்த போது கொளஞ்சி, வாசுகி, விஜய் ஆகியோர் அடிப்பட்டு வாசப்படியில் படுத்துகொண்டிருந்தார்கள். யார் அடித்ததுஎன்று கேட்டதற்கு இதுமாறி எங்கள் அண்ணன் அடித்துவிட்டதாக சொன்னார்கள்.

2. ஏன் அடித்ததார் என்று கேட்டதற்கு ஆடு கட்டியிருந்ததை அவுக்க சொன்னதாகவும், ஏன் அதை அவுக்க சொல்கிறாய், பாக அட்டவணை போட்டு பிரிச்சுவிடுங்கள் என்று கேட்டதற்கு அடித்துவிட்டதாக கொளஞ்சி சொன்னார். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3 வது எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரரணை செய்யப்படவில்லை.

**(Sd/-R.Senthilkumar)**

**D.M-cum-JM,**

**T.V.Nallur.**